[2004 நவம்பர் 17

3—

குற்றவியல் மருத்துவப் படிப்பு

***47955—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டம் பயிலுகிறவர்கள் குற்றவியல் மருத்துவப் படிப்பு பற்றியும் படிக்க வேண்டும் என்ற பழைய நடைமுறையை மீண்டும் அமல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலுகிறவர்கள் குற்றவியல் மருத்துவப் படிப்பு (Medical Jurisprudence) பற்றியும் படிக்க வேண்டும் என்ற நடைமுறை இதுவரையில் சென்னை பல்கலைக்கழகத்திலோ அல்லது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலோ இல்லை. எனவே, பழைய நடைமுறையை மீண்டும் அமல்படுத்தும் வினா எழவில்லை.

முற்பகல் 10-20

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968—1969 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் சட்டம் படித்த வழக்குரைஞர்கள், குற்றவியல் மருத்துவப் பட்டமும் பெற, பட்டப் படிப்பு இருந்ததை, மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்துகின்ற அதேநேரத்தில், குற்றவியல் வழக்குகளில் வாதாடும்போது, போதிய மருத்துவப் படிப்பு இன்மையால், நிரபராதிகள் சில நேரங்களில் தண்டிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஐந்தாண்டுகள் பயிலுகின்ற இந்த சட்டப் படிப்பில், சமூகவியல், அரசியல், அறிவியல் மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள், முதல் இரண்டாண்டுகளுக்குக் கட்டாயப் பாடமாக அறிவிக்கப்பட்டு, நடைமுறையில் உள்ளது. அதைப்போலவே, இந்தக் குற்றவியல் மருத்துவப் படிப்பும் முதல் இரண்டாண்டுகளாவது கட்டாயப் படிப்பாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2004 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வழக்கறிஞர்கள் மன்றத்தின் திருத்தப்பட்ட மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகளுக்கான பாடத் திட்டத்திலும் இப்பாடம் குறிப்பிடப்படவில்லை. எனினும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இளங் கலைக்கான பாடத் திட்டக் குழுவின் — Under Graduate Board of Studies—கூட்டத்தில், குற்றவியல் மருத்துவப் படிப்புத் தொடர்புடைய மருத்துவச் சட்டவியல் மற்றும் நஞ்சியல் — Medical Jurisprudence and Toxicology — பாடத் திட்டத்தினையும், மூன்றாண்டுகள், ஐந்தாண்டுகள் மற்றும் B.A., B.L., (Hons.)—சட்டப் படிப்பிற்கான, விருப்பப் பாடத்தை — optional subject- ஒரு விருப்பப் பாடமாகச் சேர்ப்பதற்குத் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டாயப் பாடமாக, இதனை நாம் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் 23 பாடங்கள், அதாவது, —Indian Penal Code— இந்தியத் தண்டனைச் சட்டம், Cr.P.C.— குற்றவியல் நடைமுறைச் சட்டம் —The Law of Evidence— சாட்சியச் சட்டம், அதேபோன்று 23 சட்டப் பாடங்கள், 3 ஆண்டு, 5 ஆண்டு மற்றும் B.A., B.L. (Hons.) படிப்பிற்கான பாடத் திட்டத்திலே கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றன. விருப்பப் பாடமாக —Insurance Law, Criminology and Penology, Intellectual Property Law, Law relating to Women and Children—அதாவது காப்பீட்டுச் சட்டங்கள், குற்றவியல் மற்றும் தண்டனையியல் சட்டங்கள், அறிவியல் சார்ந்த சொத்துரிமைச் சட்டம் மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கான சட்டங்கள் போன்று, இதை ஒரு விருப்பப் பாடமாக மாணவர்கள் படிக்கலாம். எனவே, இதை அடுத்த கல்வியாண்டிலேயிருந்து அமல்படுத்துவதற்கு, அதாவது விருப்பப் பாடமாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பால் மனோஜ் பாண்டியன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் மருத்துவப் படிப்பில், கை ரேகை மற்றும் தடயங்களை அளப்பது என்பது முக்கியமான ஒன்று. குற்ற வழக்குகளில், காவல் துறையினர், கை ரேகை மற்றும் தடயங்களை அளப்பதற்கு—Identification of Prisoners Act 1920— என்ற சட்டம் ஒன்று இருக்கிறது. அதில், சட்டப் பிரிவு 4 மற்றும் 8-ன்படி, அதற்கான வரைமுறை —prescribed manner— நிர்ணயிக்க, சட்ட

விதிகளை மாநில அரசு அமல்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக, உயர் நீதிமன்றம்கூட ஒரு தீர்ப்பைக் கூறியிருக்கிறது. ஆகவே, சிறப்பு நிபுணர்கள் — experts— செய்யும் இந்த அளவு, போலீசார் — காவல் துறையினர் — எடுக்கும்போது, அந்தவொரு விதியைப் பயன்படுத்தி விடுதலையைப் பெறுகிறார்கள். ஆகவே, காவல் துறையினர், தடயங்களை அளப்பதற்கு Identification of Prisoners Act-ன்படி, மாநில அரசு, சட்ட விதிகளை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு எழுப்பிய வினா, பாடத் திட்டத்திற்குட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன் அவர்கள் எழுப்பிய வினா, சட்டத் திருத்தத்திற்குட்பட்டது. எனவே, Forensic Science என்பது ஒரு important and vital role என்பது நிச்சயமாக யாராலும் மறுக்க முடியாத ஒன்று. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோஜ் பாண்டியன் அவர்களுடைய கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, உண்மையிலேயே அவர் கூறுவதுபோன்று, அந்த issues-ல் சிரமங்கள் இருக்குமானால் அரசு சட்டத் திருத்தம் செய்வதற்குக்கூட தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

4—

கோயில்களைப் புதுப்பித்தல்

***48862—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான வருமானம் இல்லாத கோயில்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?